Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, 14 AUGUST 2024

புதன்கிழமை ஆகஸ்ட் 14, 2024 | ஒளி: 10 கதிர் 028 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## ஜனாதிபதிக்கு ராஜித ஆதரவு

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். கொழும்பு - கங்காராம விஹாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்த ராஜித சேனாரத்ன, தனது ஆதரவை வழங்குவதாக கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2




# “13க்கு அஞ்சேன்”

## தமிழ் எம்.பிக்கள் மூவரிடம் சஜித் தெரிவிப்பு

### தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதாக தெரிவித்தார்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் தயாராக உள்ளேன் என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச, அதற்காக தான் வெளிப்படையாகவும் பேசி வருவதாகவும் யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளை சொல்வது இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் தான் உறுதியாக இருப்பதாகவும் ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் மாகாண சபைகளில் அதிகாரப்பகிர்வை முழுமையாக உடனடியாக நடைமுறை படுத்துவதாகவும் தெரிவித்தார் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்பதற்கான

## “ஏற்பாடுகள் பூர்த்தி”



ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வது விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வியாழக்கிழமை(15) காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## விமல் அணியின் எம்.பி. ரணிலுடன் இணைந்தார்

தேசிய சுதந்திர முன்னணியின் புத்தளம் மாவட்ட தலைவரும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் பிரியங்கர ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை செவ்வாய்க்கிழமை (13) சந்தித்த ஜகத் பிரியங்கர ,எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனது ஆதரவை வழங்க உள்ளதாகத் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

லயின் வீடுகளில் வசிப்போருக்கு

## ‘ஆறுதல்’ அஸ்வெசும

லயின் வீடுகளில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு ‘ஆறுதல்’ (அஸ்வெசும) முன்மொழிவுத் திட்டத்துக்கு உள்வாங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நலன்புரி நன்மைகள் சபை தற்போது ‘ஆறுதல்’ நலன்புரி நன்மைத் திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது.

2002 ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்ட 2022 ஆண்டின் 1 இலக்க நலன்புரி நன்மை கொடுப்பனவு (கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகைமையான நபர்களைத் தெரிவு செய்தல்) ஒழுங்குவிதிகளுக்கு அமையத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தொடர்ச்சி P2



அரச ஊழியர்களின்

## சம்பளத்தை திருத்த அங்கீகாரம்

அரச சேவையின் சகல துறைகளிலும் சம்பள திருத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை(13) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே இதனை குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## பச்சை இஞ்சி இறக்குமதி



அடுத்து வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் 3,000 மெற்றிக்தொன் பச்சை இஞ்சியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## செந்தில் விடாபிடி; 16 இல் முடிவு

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுப்பதற்காக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை, எதிர்வரும் 16ஆம் திகதியன்று கூடவிருகின்றது. இது தொடர்பில், காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் கருத்துரைக்கையில்.

நாங்கள் அரசாங்கத்துடன் இருக்கிறோம். கிழக்கு மாகாண ஆளுநராக பதவி வகிக்கிறேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை வகிக்கிறார்.

அரசாங்கத்தின் கீழ் நாங்கள் இருவரும் பொறுப்புகளில் இருக்கின்றோம் என்பதற்காக, இந்த ஜனாதிபதி தேர்தலில் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முடியாது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் தேசிய சபையில் கலந்துரையாடிய பின்னர் தீர்மானத்தை எடுப்போம்.

தொடர்ச்சி P2




## நீர்க்கட்டணத்தில் திருத்தம்

தற்போதுள்ள நீர்க்கட்டணங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2023.08.01 அன்று தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறித்த கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கான கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை அமுல்படுத்துவதற்காக 2024.07.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை மின்சாரக் கட்டணத்தை 2024.07.16 ஆம் திகதியிலிருந்து குறைத்துள்ளமையாலும், எரிபொருள், இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் வட்டிக் கிரயம் போன்றவற்றின் கிரயம் குறைவடைந்திருப்பதைக் கருத்திலெடுத்து, நீர்க்கட்டணத்தை ஓரளவு வீதத்தில் குறைப்பதற்கான இயலுமை காணப்படுகின்றது.

அதற்கமைய, சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் நகர்ப்புற தோட்ட வீடுகள் தவிர்ந்த வீட்டு அலகுகளுக்கு 7 சதவீதமும் அரச



மருத்துவமனைகளுக்கு 4.5 சதவீதமும் பாடசாலைகள் மற்றும் வணக்கத் தலங்களுக்கு 6.3 சதவீதமும் குறைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## ஸ்டார்லிங்க்குக்கு இணையச் சேவை அனுமதி

இலங்கையில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணையச் சேவைகளை வழங்குவதற்காக ஸ்டார்லிங்க் தனியார் நிறுவனத்திற்கு “தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்” அனுமதிப் பத்திரத்தை வழங்கத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## “கிழக்குப் பறிபோவதை வேடிக்கை பார்க்காது வடக்கு”

நிதர்ஷன் வினோத்

“கிழக்குப் பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது” தமிழரின் வரலாற்றுத் தொன்மையைச் சீரழிக்கும் நடவடிக்கையை ஆளுநர் தொடர்ந்தால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.. கிழக்கின் முதுசமும் தமிழர்களின் அடையாளமுமான திருகோணமலை திருக்கோணேச்சரம் ஆலயத்தை யாப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்பட்டு அரசுடைமையாக்கத் திட்டமிடும் கிழக்கின் ஆளுநர் செந்தில் தொண்டமானின் அடாவடிகளை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆலய செயற்பாடுகள் சுயாதீனமாக இடம்பெற வேண்டுமென்று கோருகிறோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "13க்கு அஞ்சேன்"

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர், ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் ராஜபக்ஷவை, சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவின் அழைப்பை ஏற்று, கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு, செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளரைக் களமிறக்கவுள்ள நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக சஜித் பிரேமதாச, பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பினை தனித்தனியாக, அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையில் மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும் சஜித் பிரேமதாச, தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்க உள்ள நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பில் பங்கேற்பதென முடிவு செய்தனர்.

இச்சந்திப்பில், பிரதானமாகத் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமாக சமஷ்டி முறையில் அரசியல் தீர்வு தொடர்ந்து எட்டப்படாமல் இருப்பதனாலேயே பொது வேட்பாளர் என்ற முடிவு வலுப்பெற்றது என்பது தெளிவு படுத்தப்பட்டது.

இதுவரை காலமும் தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக் கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் இம்முறை அந்த சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தான் முடிவு காண்பதாகத் தெரிவித்தார். ஆகவே, கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் வைத்துக் கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளைப் பெற்றுக் கொண்டவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குச் சகல உரிமையும் இருக்கிறது என்பதையும் அதைத்தான் மதிப்பதாகவும் தெரிவித்த அவர் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உங்களுடைய நிலைப்பாட்டுக்குத் தான் மதிப்பளிப்பதாகவும் தெரிவித்தார். ஆனால், தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மத மற்றும் பிரதேச ரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்கள் முன்னிலைப் படுத்துவது ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்றும் கருத்து தெரிவித்தார்.

அவரைப் பொறுத்தவரை முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காகத் தான் தயாராக உள்ளேன் என தெரிவித்தார். அதற்காகத் தான் வெளிப்படையாகவும் பேசி வருவதாகவும் யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளைச் சொல்வது இல்லை என்றும் தெரிவித்தார். இவ்விடயத்தில் தான் உறுதியாக இருப்பதாகவும் ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பைத் தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இப்படியான பிரச்சினைகளுக்குத் தான் சிறப்புப் பணிக் குழுக்களை அமைத்து தனது நேரடி மேற்பார்வையின் கீழ் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்தார்.

தான் இலங்கையில் உள்ள அனைத்து இனங்களையும் அனைத்து மதங்களையும் நேசிப்பவன் என்றும் தான் ஒரு இனவாதி அல்ல என்பதையும் தமிழ் மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே வரும் தேர்தலில் தனக்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அவருடைய கருத்துக்களைப் பரிசீலித்து மற்றவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்துவதாகத் தமிழர் தரப்பில் தெரிவித்ததுடன் சந்திப்பு முடிவு பெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் பங்கேற்றார். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷ் கலந்து கொண்டார்.



# ஜனாதிபதிக்கு ராஜித ஆதரவு

அதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜித சேனாரத்ன, ரணில் விக்ரமசிங்கவிற்கு தனது முழுமையான ஆதரவை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# "ஏற்பாடுகள் பூர்த்தி"

வியாழக்கிழமை (15) காலை 9 மணி முதல் 11 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்கப்படும். வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளைக் காலை 11 மணி முதல் 11.30 மணி வரை தெரிவிக்கலாம்.

ஆட்சேபனை காலம் முடிந்ததும் கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள் வெளியிடப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்போது, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதன் சுற்றுவட்டாரப் பகுதிக்கும் விசேட பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்கப்படும் போது, அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்படும், மேலும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வாகனங்கள் மட்டுமே வலயத்திற்குள் செல்ல முடியும்.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் வேளையில் சரண மாவத்தையைச் சுற்றியுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகள் மூடப்படவுள்ளதால், பொது அலுவல்கள் மற்றும் இதர கடமைகளுக்காக வருவதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேட்புமனுக்களைக் கையளிப்பதற்காக வேட்பாளருடன் இருவர் மாத்திரம் மண்டபத்திற்கு வர முடியும் அவர்களுக்கு விசேட அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கு அடுத்துள்ள கட்டிடத்தில் மேலும் மூன்று விருந்தினர்கள் அனுமதிக்கப்படுவார்கள்

வேட்பாளரை ஏற்றிச் செல்லும் வாகனம் மாத்திரம் சரண மாவத்தைக்குள் செல்ல முடியும். வேட்பாளர் சரண மாவத்தையில் கடைசி வீதித் தடைக்கு அருகில் வாகனத்தை நிறுத்திவிட்டுத் தேர்தல் அலுவலகத்திற்கு நடந்து செல்ல வேண்டும். வேட்பாளர்களுடன் வரும் ஆதரவாளர்கள் அமர்ந்திருப்பதற்குச் சிறப்பு இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேட்புமனுக்களைச் சமர்ப்பித்த பின்னர் ஆதரவு பேரணிகளை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் கோரப்பட்ட பின்னர் ஐந்து நாட்களுக்குள் வேட்பாளர்கள் அழைக்கப்பட்டு ஒவ்வொரு வேட்பாளருக்கும் செலவிடப்படும் தொகை தெரிவிக்கப்படும் என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு விநியோகம் வேட்புமனு தினத்தின் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வரவு- செலவுத் திட்டத்தில் 1000 கோடி ரூபாய் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் தொகையை அதிகரிக்க வாய்ப்பில்லை எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இருப்பினும், அதிகரித்து வரும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அலுவலக செலவுகள் மற்றும் அச்சிடுதல் செலவுகள் அதிகரிக்கும் என்றும், இது பெரும் சவாலாக இருப்பதாகவும் ஆணையம் கூறுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் தேர்தல் நடவடிக்கைகளை அவதானிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அவர்களின் செலவில் அதனை மேற்கொள்வதாகவும் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஆசியாவின் பல நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேட்புமனுக்கள் ஏற்கப்படும் நாளில் தேர்தல் அலுவலகத்தின் பாதுகாப்பிற்காக சுமார் 1500 பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# பச்சை இஞ்சி இறக்குமதி

இஞ்சி உற்பத்திக்கான வசதிகளை வழங்கி உள்நாட்டுச் சந்தையில் நுகர்வோரின் தாங்கு திறன் மட்டத்தில் இஞ்சியின் சில்லறை விலையைக் குறைப்பதற்கான விலை மட்டத்தை ஆராய்ந்து பார்த்து, அதுதொடர்பாக பொருத்தமான விதந்துரைகளுடன் கூடிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு விவசாய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு 2024.07.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் விதந்துரைகளின் அடிப்படையில், அடுத்து வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் 3,000 மெற்றிக்தொன் பச்சை இஞ்சியை இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் மூலம் கட்டம் கட்டமாக இறக்குமதி செய்வதற்கு விவசாய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# 'ஆறுதல்' அஸ்வெசும

அந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் நபர்கள் அல்லது குடும்பங்கள் 'ஆறுதல்' நன்மைகளைப் பெறுவதற்கான உரித்தைப் பெறுவார்கள். பெருந்தோட்டத் துறையில் உள்ள தோட்டங்களில் தனி வீடுகள் இல்லாதிருப்பதன் காரணமாகத் தோட்டத் தொழிலாளர்களின் தனிக் குடும்பங்கள் கூட்டாக ஒரே லயின் வீடுகளில் வசிக்கின்றனர்.

தற்போதைய நடைமுறைக்கமைய, குறித்த சந்தர்ப்பத்தில் வேறுவேறான குடும்ப எண்ணிக்கைகளைக் கருத்தில் கொள்ளாமல், லயின் அறைகளில் வாழ்கின்ற அனைத்து நபர்களும் ஒரு குடும்ப அலகாகக் கருதப்படுகின்றனர். மேற்குறித்த குடும்பங்களுக்குப் பாதகமானது என்பது தெரியவருகிறது.

எனவே, 2022 ஆண்டின் 1 இலக்க நலன்புரி நன்மைகள் கொடுப்பனவை (கொடுப்பனவுகளுக்குப் பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்தல்)



கட்டளைகளின் பிரகாரம்,'ஆறுதல்' (அஸ்வெசும) முன்மொழிவுத் திட்டத்திற்குத் தகைமைகளை நிர்ணயிக்கும் போது லயின் வீடுகளில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு செயலாற்றுமாறு நலன்புரி நன்மைகள் சபைக்கு உத்தரவிடுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஸ்டார்லிங்க்குக்கு இணையச் சேவை அனுமதி

1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 17 (2) இன் கீழ் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் (TRCSL) இந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோடு 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் இந்த அனுமதி நடைமுறைக்கு வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் உலகப் புகழ்பெற்ற வர்த்தகர் எலான் மஸ்க்கிற்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இந்தோனேசியாவில் நடைபெற்றது.

எலான் மஸ்க்கிற்குச் சொந்தமான ஸ்டார்லிங்க் வலையமைப்புடன் இலங்கையை இணைப்பதற்கான விண்ணப்ப செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது. இதன் விளைவாக, செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் மூலம் இலங்கையில் இணைய வசதி சேவைகளை வழங்க ஸ்டார்லிங்க் (Starlink) நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போதுள்ள பைபர் தொழிநுட்ப இணையச் சேவையை விட இந்த இணையச் சேவையானது பல மடங்கு வேகமானது என்பதனால் உலகில் எந்த இடத்திலிருந்தும் இந்த சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் எதிர்காலத்தில் இலங்கையின் தொழில்நுட்பத் துறையில் சிறந்த சூழல் உருவாகும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# செந்தில் விடாபிடி; 16 இல் முடிவு

அரசாங்கத்துடன் பேரம் பேச வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி வெற்றி பெற்றுள்ளோம். இந்த விவகாரத்தைத் தேசிய சபைக்குக் கொண்டு செல்வேன். அதன் பின்னர் இறுதித் தீர்மானத்தை எடுப்போம் என்றார்.

# நீர்க்கட்டணத்தில் திருத்தம்

மேலே குறிப்பிட்டுள்ளவாறு நீர்க்கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்காக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# விமல் அணியின் எம்.பி. ரணிலுடன் இணைந்தார்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச என்பது குறிப்பிடத்தக்கது.

# "கிழக்குப் பறிபோவதை வேடிக்கை பார்க்காது வடக்கு"

ஆளுநரின் அடாவடிகள் தொடர்ந்தால் வடக்குக் கிழக்கில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை இத்தால் சம்பந்தப்பட்டவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம். கிழக்குப் பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என்பதை ஆளுநர் அறிய வேண்டும்.

அரசின் எலும்புத் துண்டுகளுக்காகத் தமிழரின் வரலாற்றுத் தொன்மைகளைச் சீரழிக்கும் நிகழ்ச்சி நிரலைக் கைவிடுமாறு கிழக்கின் ஆளுநரைக் கோருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# சம்பளத்தை திருத்த அங்கீகாரம்

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

அரச சேவையில் சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய பணிக்கொடைகளை மீளாய்வு செய்து, அரச சேவையில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் சம்பளத்தைத் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவு 2025 வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கான விதந்துரைகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிபுணத்துவ குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.05.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச துறையின் பிரதான தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடியுள்ளது.

அத்தகவல்களை பகுப்பாய்வு செய்த பின்னர் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் விதந்துரைக்கபட்டுள்ள பின்வரும் முன்மொழிவுகளுக்குக் கொள்கை ரீதியாக அங்கீகாரம் வழங்குவதற்கு, குறித்த முன்மொழிவுகளை 2025இன் வரவு -செலவுத் திட்டத்தில் ள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

* ஒட்டுமொத்த அரச சேவையில் உள்ள அனைத்து பதவிகளையும் நான்கு பிரதான மட்டங்களின் கீழ் வகைப்படுத்தி ஒவ்வொரு வகுதிக்கும் இலங்கைத் தராதர வழிகாட்டல் மற்றும் தேசிய தொழில் நிபுணத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உரியத் தொழிலின் பணிப்பொறுப்புகள் மற்றும் விசேட தொழில்களுக்கான நிபுணத்துவத்துடைய ஊழியர்களைக் கவர்ந்திழுப்பதற்கும், தொழில்களைத் தக்கவைத்தலை கருத்தில் கொண்டு ஆட்சேர்ப்புத் தகைமைகளை உபவகுதிகளுக்கு வகைப்படுத்தல்.

* ஆரம்ப நிலை சேவை வகுதிகளுக்கும் ஆட்சேர்ப்புக்கான அடிப்படை தகைமைகளாக இலங்கை தராதர வழிகாட்டல், தேசிய தொழில் நிபுணத்துவத்தின் அடிப்படையில் சேவை தேவைகளுக்கேற்ப பொருத்தமான முறையைப் பின்பற்றுதல்.

* ஏனைய அனைத்து சேவை வகுதிகளுக்கும் முறைப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை முறை மூலமாக மட்டும் ஆட்சேர்ப்புச் செய்தல்.

* அதற்கமைய, தகைமைக்கு ஏற்புடைய வகையில் தற்போது உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகள் துரிதமாகத் திருத்தம் செய்தல்

* 2025ஐ அடிப்படை ஆண்டாகக் கருதி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சீராக்கல்கள் மற்றும் இதுவரை சேர்க்கப்பட்டுள்ள அனைத்துக் கொடுப்பனவுகளையும் ஒருங்கிணைத்து அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்யும் அடிப்படையில்) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக மாதாந்தம் 25,000ரூபாவை வழங்கல்.





## விபத்தில் வாகனங்கள் சேதம்

மட்டக்களப்பு - அக்கரைப்பற்று பிரதான வீதியில் கல்முனை, பாண்டிருப்பு என்ற இடத்தில் செவ்வாய்க்கிழமை (13) காலை கெப் வண்டியுடன் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மோதியதில் இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆடாத ஆசிரியை நடுவரான சோகம்

நாடளாவிய ரீதியில் பல வலயங்களில் தற்போது நடைபெற்று வரும் தமிழ்த் தின போட்டிகளில், சில வலயங்களில் முறைகேடுகள் இடம்பெற்றமை தொடர்பான செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், கண்டி வலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) நடத்தப்பட்ட தமிழ்த் தின போட்டிகளில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த போட்டிகள் தெல்தோட்டையில் இடம்பெற்றன.

நடுவர் குழுவில் விடயதானம் தொடர்பில் எவ்விதமான அனுபவமற்றவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். உதாரணமாகத் தனி நடனத்துக்கான நடுவர் குழாமில், நடனமே கற்றுக் கொள்ளாத, எவ்விதமான முன் அனுபவமும் இல்லை ஆசிரியை இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நடுவராக பணியாற்றிய அந்த ஆசிரியை ஆரம்பப்பிரிவு நியமனம் உள்ள தமிழ்ப் பாட வளவாளர் என்றும், அந்த ஆசிரியை தனி நடனத்துக்கு வழங்கிய புள்ளியை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுடுகிறது மடியைப் பிடி என்பது போல, மாணவர்களைப் போட்டிக்கு அழைத்து வந்த ஆசிரியர்களில் ஒரு சிலரை நடுவர் குழுவில் இணைத்து போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

4 போட்டிகளுக்காக மாணவர்கள் காலை 8 மணிக்கு அழைக்கப்பட்டுள்ளது, போட்டிகள் நண்பகல் 12 மணியைக் கடந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போட்டிகள் இரவு 10 மணியைத் தாண்டி நிறைவடைந்துள்ளன.

தூரப் பிரதேசங்களுக்கு வந்திருந்த மாணவர்களில் சிலரை அவர்களுடைய பெற்றோர்களே அழைத்து வந்துள்ளனர். இரவு வேளையில் மாணவர்களை வைத்திருந்தமையால், பெற்றோர்களுக்கும் வலயத்தின் பொறுப்பதிகாரிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

வாக்குவாதம் முற்றிப் போகவே, நீங்கள் வந்து புள்ளிகளைப் போடுங்கள் என அதிகாரிகள் பெற்றோர்களிடம் கடுந்தொனியில் தெரிவித்துள்ளனர். போட்டிகள் நள்ளிரவு 12 மணியைக் கடந்து நிறைவடைந்துள்ளது. இதனால், வாகன வசதிகள் இல்லாத மாணவ, மாணவிகளும் பெற்றோர்களும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வீடுகளுக்குச் சென்று சேர்ந்துள்ளனர்.

மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டிய இவ்வாறான நிகழ்வுகள் முறையாக ஒழுங்கமைக்க கண்டி வலயக் கல்விப் பணிமனை தவறியுள்ளதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் வலயக்கல்விப் பணிமனையுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்த போதிலும் அம்முயற்சிகள் பலனளிக்கவில்லை.

கண்டி வலயக் கல்விப் பணிமனையின் விளக்கத்தை 011-7479372 அல்லது 011-7479375 என்ற தொலைபேசி இலக்கத்துடன் சனி,ஞாயிறு தினங்களைத் தவிர்த்து ஏனைய தினங்களில் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும். இல்லையேல், tamilmirrorofficial@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.



## திடீர் மழையால் பெரும் பாதிப்பு

அம்பாறை மாவட்டத்தில் பெய்யும் திடீர் மழையால் சிறுபோகத்தில் அறுவடை செய்த நெல்லை உலர்த்துவதில் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாம் அறுவடை செய்த நெல் மழையால் ஈரமற்ற நிலையில் கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை பிரதான வீதியின் இரு மருங்கினையும் நெல்லை வெயிலில் உயர்த்துவதற்காக விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

பெரும்போகத்தில் போது ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் நஷ்டமடைந்த விவசாயிகள் பரவலாக சிறுபோகத்தில் சிறந்த விளைச்சல் கிடைத்திருந்த போதிலும் இதுவரை நெல் சந்தைப்படுத்தும் சபையினால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யாத படியால் அரிசி ஆலைகளுக்கு வழங்கி வருகின்றனர். இதனால் பாரிய நட்டத்தை விவசாயிகள் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஈரமான நெல்லை மிகக் குறைந்த விலைக்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்வதால் உலர வைக்கும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்ட போதிலும் இதற்காக மேலதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## கண்டி மாணவனை காணவில்லை

ஷேன் செனவிரத்ன

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கல்வி கற்கும் 15 வயதுடைய மாணவன் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பவில்லை என மாணவனின் தாயார் கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டை ரணவன வீதியை சேர்ந்த மொஹமட் முகறத் முஜாஹித் என்ற மாணவனின் தாயார் செய்த முறைப்பாட்டில் , தனது மகன், திங்கட்கிழமை (12) பாடசாலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பவில்லை என தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவன் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி திங்கட்கிழமை (12) காலை 6.00 மணியளவில் வீட்டை விட்டுச் சென்றதாகவும் அதன் பின்னர் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை எனவும் தாய் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனைக்கு 28 வைத்தியர்கள் நியமனம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பொருட்டு புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட வைத்தியர்கள் 28 பேர் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர்களுக்குரிய சேவை நிலையங்களுக்கு கடிதங்கள் கையளித்தல் மற்றும் அறிமுக நிகழ்வு திங்கட்கிழமை (12) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.



இதன்போது வைத்திய அத்தியட்சகர்கள் மற்றும் பிரிவு தலைவர்கள் தமது பிரிவு தொடர்பான விபரங்களையும் பணிமனை மற்றும் வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகள், செயற்றிட்டங்கள் தொடர்பான விபரங்களையும் வழங்கினர்.

கல்முனை பிராந்தியத்திற்கு இம்முறை அதிகமான வைத்தியர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மேலதிகமாகவும் இரண்டு வைத்தியர்களைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காதலியை தேடிச் சென்ற தந்தை சடலமாக மீட்பு

நீர்கொழும்பில் இருந்து சிலாபம் தொடுவா பிரதேசத்திற்குத் தனது 19 வயதுடைய காதலியைத் தேடிச் சென்ற 30 வயதுடைய இளைஞனின் சடலம் குறித்த பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதாக தொடுவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு- திபிரிகஸ்கட்டுவ, ஹரிச்சந்திர புர பிரதேசத்தைச் சேர்ந்த சமித் மதுசங்க என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பிலான விசாரணைகளின் போது தெரியவருவதாவது,

ஒரு பிள்ளையின் தந்தையான குறித்த நபர், தனது மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில், அவர் வசித்து வந்த அதே பகுதியில் உள்ள 19 வயது இளம் பெண் ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார்.

தங்களுடைய மகள் திருமணமான ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டு வருவதை அறிந்த குறித்த பெண்ணின் பெற்றோர்கள் மகளை, மஹவெவ தொடுவா பிரதேசத்தில் உள்ள உறவினரின் வீட்டில் தங்க வைத்துள்ளனர். இது தொடர்பாகத் தகவல் அறிந்த இளைஞன் கடந்த 10ஆம் திகதி இரவு தனது காதலியைத் தேடி அவர் தங்கி இருந்த வீட்டருகில் சென்று மறைவாக இருந்துள்ளார்.

வீட்டுக்கு வெளியில் யுவதி சென்ற போது, இளைஞன் வந்து அவரை அழைத்துள்ளதுடன், தனது காதலனைக் கண்டதும் அவர் வீட்டுக்குள் ஓடிச் சென்று உறவினர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அப்போது இளைஞனைப் பிடிக்க வீட்டில் இருந்த சிலர் துரத்திச் சென்ற போது, அவர் இருட்டிலேயே தப்பியோடிய நிலையில், அருகில் இருந்த பாழடைந்த கிணற்றில் ஏதோ விழும் சத்தம் கேட்டதாக பெண்ணின் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிந்துஜாவிற்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்

எஸ்.ஆர்.லெம்பேட்




மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த சிந்துஜாவிற்கு நீதி கோரி, செவ்வாய்க்கிழமை (13) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் ஏற்பாடு செய்த குறித்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருப்பு துணியால் தனது வாயைக் கட்டி, கையில் கருப்புக் கொடியை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது .

## காட்டின் நடுவே ஆசிரியரை இறக்கிவிட்டுச் சென்ற அவலம்

அஸ்ஹர் இப்றாஹீம்

ஆசிரியர் ஒருவரை நடுக்காட்டில் இறக்கி விட்டுச் சென்ற பேருந்தொன்று தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை - யாழ்ப்பாண சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தில் பயணித்த, கஷ்ட பிரதேச பாடசாலையியொன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கே இச் சம்பவம் நேர்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியர் தெரிவிக்கையில்,

“மட்டக்களப்பு எல்லைக் கிராமப்புற பாடசாலையான ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்தில் இருந்து ஓட்டமாவடிக்கு வருவதற்கு திங்கட்கிழமை (12) அன்று இ.போ.ச. பேருந்தில் பயணித்த சமயம் இடைநடுவே என்னுடைய பிரயாணப்பை பேருந்தில் இருந்து தவறி விழுந்து விட்டது. ஒரு சில தூரத்துக்கு பேருந்தும் முன்னோக்கி சென்று விட்டது.

அதை நன்கு அவதானித்த சாரதி, பேருந்தை நிறுத்தி என்னுடைய பையை எடுத்து வரும் வரையில் காத்து நிற்பதாக சொன்னார். நான் அந்தப் பையை எடுக்க சென்றதும், யானைகள் நடமாட்டம் உள்ள காட்டு பகுதிக்குள் என்னை தன்னந்தனியே விட்டு சென்று விட்டார்.

உயிருக்கு உத்தரவாதம் இல்லாத அந்த பகுதியில் கொளுத்தும் வெயிலில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அச்சத்தோடு காத்திருந்து ஓட்டமாவடி வந்தடைந்த துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டது.

இவ்வாறான மோசமான செயல்களில் ஈடுபடும் ஒரு சில சாரதி, நடத்துனர்களால் ஒட்டுமொத்த நிறுவனத்திற்கும் அவப்பெயர் ஏற்படுவதுடன், அரச பேருந்துகளை நம்பி பயணிக்கும் அரச ஊழியர்கள், பொது மக்களுக்கும் அசௌகரியங்கள், நம்பிக்கையீனங்களும் ஏற்படுகிறது” என தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் போக்குவரத்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

### ஆசிரியர் உதவியாளர் போட்டி பரீட்சைக்காக

## சட்ட ஆலோசனைகளை பெற்று வருகிறோம்

எஸ்.கணேசன்

ஆசிரியர் உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தலையிட்டு மீளப் பெறப்பட்டால் மட்டுமே திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெற வாய்ப்பு இருக்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், “ஜனாதிபதியின் தலையிட்டால் ஆசிரிய உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவு மீள பெறப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தை நாடி தடை உத்தரவு பெற்றமை இது இரண்டாவது முறையாகும்.

பெருந்தோட்ட பிரதேச ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பதாரிகளுக்கு உதவும் நோக்கத்தில் நாம் சட்ட ஆலோசனைகளை பெற்று வருகிறோம். மலையகத்தைச் சேர்ந்த சட்ட வல்லுநர்கள் ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பத்தாரிகளின் நலன் கருதி உதவ வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கூறுவது போல எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தலையிட்டு இதற்கு ஒரு முடிவு காணவேண்டும். அல்லது நாம் இந்த விடயத்தை சட்டரீதியாக எதிர்கொள்ள தயாராகி வருகிறோம்” என தெரிவித்துள்ளார்.



## உழவு இயந்திரம் கவிழ்ந்ததில் ஒருவர் பலி

வவுனியா-மடுகந்த பிரதேசத்தில் உழவு இயந்திரம் வயல்வெளியில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளதாக மடுகந்த பொலிஸார் தெரிவித்தனர்.



உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே, அவர் வயலுக்குச் சென்று கொண்டிருந்த போது, உழவு இயந்திரம் பாதுகாப்பற்ற வயல்வெளியில் கவிழ்ந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 1,700 ரூபாய் சம்பள உயர்வும் நான்கு நிபந்தனைகளும்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குவதற்கான தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த சம்பளம், எப்போது இருந்து வழங்கப்படும். நிலுவைக்கு என்ன நடந்தது? ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பில் எவ்விதமான அறிவிப்பு வெளியாகவில்லை.

மாடாய் உழைத்து ஓடாய் தேயும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,700 ரூபாய் அல்ல, அதற்குமேல் வழங்கப்பட வேண்டும். அதற்கான இயலுமை கம்பனிகளிடம் உள்ளன. எனினும், கூடுதலான வருவாயை எதிர்பார்த்து, சம்பள உயர்வையும், ஏனைய நலன்புரி விடயங்களையும் கம்பனிகள் தட்டிக்கழித்தே வருகின்றன.

நாளாந்த சம்பளமாக 1,350 ரூபாவை வழங்கவும், வேலை வழங்கப்படும் நாட்களில் 80 சதவீத நாட்கள் வேலைக்கு சமூகமளித்தவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக 350 ரூபாய் வழங்குவதற்குச் சம்பள நிர்ணய சபையில், திங்கட்கிழமை (12) நடந்த பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டது. இது புதிதல்ல முதலாளிமார் சம்மேளத்தினால் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட யோசனையாகும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு நாடகத்தில் 1,700 ரூபாய் அவ்வப்போது வந்து செல்லும் கோமாளியாக இருந்தது. ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் கோமாளி வந்துள்ளது. அதனால் என்னவோ, இம்முறை பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்யவில்லை. சம்பள உயர்வு பேச்சுவார்த்தை இறுதி செய்யப்படவில்லை. மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை இடம்பெறலாம்.

தேர்தல் காலத்தில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியாது என கையை விரிக்கக்கூடும். ஆகையால், செப்டம்பர் மாத சம்பளத்தில் சம்பள உயர்வு கிடைக்குமா? என்பது தொடர்பில் அச்சம் கொள்வது சாதாரண சந்தேகமாகும். இதற்கிடையில், இது தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகுமெனக் குற்றஞ்சாட்டிய ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வோம் என்றும் எச்சரித்துள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு தாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் எனினும், சம்பள விவகாரத்தைத் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இது நியாயமான கோரிக்கையாகும். ஏனெனில், ஜனாதிபதி தேர்தலில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாக்குகள், வெற்றி தோல்வியில், கணிசமான தாக்கத்தைச் செலுத்தும்.

சம்பள உயர்வு தீர்மானத்துக்கு ஆதரவாக 11 வாக்குகளும் எதிராக மூன்று வாக்குகளும் பதிவாகியிருந்தன. அதன்படி மேலதிக மூன்று வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த தீர்மானம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு ஆட்சேபனைகள் இருப்பின் 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கிடையே, “தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வைக் கேட்டு, 03 வருடங்களுக்குப் போராட்டமோ அல்லது வேறு எந்த நடவடிக்கையையோ முன்னெடுக்க கூடாது. மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோ கிராம் கொழுந்துக்கு 50 ரூபாய் கொடுக்கப்படும், மேலதிக கொடுப்பனவான 350 ரூபாவுக்கு கொழுந்தை மாத்திரம் தான் பறிக்க வேண்டும் என்பது நிபந்தனைகளாகும்” என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எங்களை நாங்கள் தான் அமைதிப்படுத்த வேண்டும். எவரையும் நாம் குழப்புதல் ஆகாது. எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறர் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானது கிடையாது. தேவையற்ற விமர்சனங்கள், நெஞ்சத்தை நோகடித்தல், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்கச் செயலாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல! அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

ஒருவர் தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவைகளில் அக்கறை கொண்டு இயங்குகின்றார். இந்த நிலையில் அக்கறையுடன் வாழ்பவர், மற்றவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன் வெறும் சடப்பொருள் அல்ல; சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# குறைந்த தீங்கை தெரிவு செய்யும் நிலையில் சிறுபான்மையினர்



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷவும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதித்துள்ளார். ஆனால், அதனால் தேர்தல் களத்தில் பாரிய மாற்றம் எதுவும் ஏற்படப் போவதாக தெரியவில்லை.

அவரை வேட்பாளராக பிரகடனப்படுத்திய பொதுஜன முன்னணியின் கூட்டத்திற்கு ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பலர் சமூகமளிக்காமையும் தெளிவாகத் தெரியவிருந்தது.

பொதுஜன முன்னணி இம்முறை போட்டியிடா விட்டால் மக்கள் அதனை முற்றாகவே மறந்து விடக்கூடும். அக்கட்சி இம்முறை ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கு முன்வந்திருந்தால், ரணில் தோல்வியடைந்தாலும் அவருடன் இணைந்த பொதுஜன முன்னணியினர் மீண்டும் ராஜபக்ஷக்களுடன் சேர்ந்துகொள்வார்களா என்பது சந்தேகமே. ஏனெனில், ராஜபக்ஷக்களை மக்கள் எவ்வளவு வெறுக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இப்போது நாமல் களமிறங்கிய நிலையில், சிறிதளவு ஆதரவாளர்களாவது பொதுஜன முன்னணியோடு தொடர்ந்தும் இணைந்து இருப்பார்கள். ராஜபக்ஷ என்ற நாமமும் ஊசலாடிக்கொண்டாவது இருக்கும். எனினும், மஹிந்தவின் மகன் என்ற காரணத்தால் சிலவேளை, நாமலும் அனுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகிய பிரதான வேட்பாளர்களுடன் பிரதான நான்காவது வேட்பாளராகக் களத்தில் இருக்கலாம்.

இந்த நிலையிலேயே இத்தேர்தலில் சிறுபான்மை மக்கள் கடைப்பிடிக்கப் போகும் உத்திகளை ஆராய வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் சிறுபான்மை மக்கள் இரண்டு விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று சிறுபான்மை மக்கள் என்ற வகையில், தமிழர்களும் முஸ்லிம்களும் இத்தேர்தலில் எதை அடையப் போகிறார்கள் என்பதாகும். மற்றையது மேலும் ஓரிரு வருடங்களில் மற்றொரு பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் அபாயத்தை எதிர்நோக்கி இருக்கும் இலங்கை அதிலிருந்து மீட்கச் சிறுபான்மை மக்களால் ஏதாவது பங்களிப்பை வழங்க முடியுமா என்பதாகும்.

தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டம் தோல்வி அடைந்த போதிலும், தமிழர்களுக்கு இன்னமும் சமஷ்டி ஆட்சி முறை, அதிகபட்ச அதிகார பரவலாக்கல் மற்றும் சுயநிர்ணய உரிமை போன்ற அரசியல் குறிக்கோள்கள் இருக்கின்றன. அத்தோடு வடக்கு, கிழக்கு இணைப்பு, பொறுப்புக் கூறல் போன்ற அரசியல் கோரிக்கைகளும் இருக்கின்றன.

ஆனால், முஸ்லிம் மாகாண சபை போன்ற எந்தவோர் அரசியல் குறிக்கோள்களும் இப்போது முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் இல்லை. இனவாத தாக்குதல்கள் போன்றவற்றின் போது பெரும்பான்மையினர் தலைமை தாங்கும் கட்சிகள் முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுக்காததால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் குரல் கொடுப்பதற்காக மட்டுமே முஸ்லிம் அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

இதற்குப் புறம்பாக முஸ்லிம் தலைவர்கள் தமக்குப் பட்டம் பதவிகளைப் பெறுவதற்காக ஆளும் கட்சிகளுடன் பேரம் பேசுவதற்கு இக்கட்சிகள் அத்தலைவர்களுக்கு உதவுகின்றன.

தேர்தல் காலங்களில் அவர்களின் நகர்வுகள் இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. சமூகத்தை மையமாகக்கொண்ட குறிக்கோள்கள் தற்போதைய அரசியல் நிலைமையின் கீழ் அவர்களுக்கு இல்லாவிட்டால் நாட்டு நலனே அவர்களது குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆயினும், அவ்வாறு முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களோ அல்லது ஏனைய கட்சிகளில் செயல்படும் முஸ்லிம் தலைவர்களோ சிந்தித்துச் செயற்படுவதாகத் தெரியவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இக்கட்சிகள் தனித்துப் போட்டியிட்டு வெல்லப் போவதுமில்லை. ஏனைய வேட்பாளர்கள் மீது எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதுமில்லை. அவர்கள் தற்போது களத்தில் இருக்கும் பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால், எந்த அடிப்படையில் அவர்கள் அதற்காக ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்யப் போகிறார்கள் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கிறது. இனவாத வேற்றுமை எந்த வேட்பாளரிடம் குறைவாக இருக்கிறது என்பதை ஒரு அடிப்படையாக எடுத்துக்கொள்ளலாம். அல்லது பொதுவாக நாட்டு நலனை அடிப்படையாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், பெரும்பாலும் நாட்டு மக்களுக்கு அல்ல, கட்சித் தலைவர்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது என்ற அடிப்படையில் அவர்கள் செயற்படுவார்கள் போல் தான் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ் தலைவர்கள் மூன்று பிரிவாகப் பிளவுபட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இத்தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்கிறது. ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று கூறுகிறது. பிரதான தமிழ் கட்சியாகக் கருதப்படும் இலங்கை தமிழரசுக் கட்சி இந்த இரண்டு கருத்தையும் நிராகரித்து பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு ஆதரவைத் தெரிவிக்க வேண்டும் என்கிறது.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் இந்த விவாதம் சூடு பித்து வருகிறது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளோட்), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் தேசிய கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் ஆகிய ஐந்து கட்சிகள் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கடந்த வாரம் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரனை தமிழ் பொது வேட்பாளராக அறிவித்தன. அவரும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்போரும் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்போரும் தமிழ் மக்கள் இது வரை நாட்டை ஆட்சி புரிந்த தலைவர்களின் அரசியலை நிராகரிக்கின்றனர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டவே அவ்வாறு செய்ய வேண்டும் என்கின்றனர்.

ஆயினும், தமிழரசுக் கட்சி பெரும்பான்மை வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து அவருக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டு அதன்படி, மக்கள் வாக்களித்தால் அவ்விரு சாராரினதும் நோக்கம் நிறைவேறாது. நிறுத்தப்படும் தமிழ் வேட்பாளர் மிகக் குறைவாக வாக்குகளைப் பெற்றால் நிலைமை மிக மோசமானதாக இருக்கும்.

அதேவேளை, தமிழரசுக் கட்சி வாக்களிப்பதற்காக எந்த அடிப்படையில் தென் பகுதியிலிருந்து வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யப் போகிறது என்பது முக்கிய விடயமாகும். தென்பகுதியில் எந்தவொரு வேட்பாளரும் சுயநிர்ணய உரிமையையோ, சமஷ்டி முறைமையையோ, வடக்கு கிழக்கு இணைப்பையோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஏழாண்டுகளாக நடைபெறாதிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை மீண்டும் நடத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்த சட்ட மூலத்தை நிறைவேற்றி அத்தேர்தல்களை நடத்தத் தாம் தயார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியதாக ஊடகங்கள் கூறின.

ஐக்கிய தேசிய கட்சியே மாகாண சபைத் தேர்தல்களை முடங்கச் செய்தது. சுமந்திரனின் சட்டமூலத்தை கிடப்பில் போட்டதும் ஐ.தே.கவேயாகும். அவற்றையெல்லாம் மறந்து விட்டு இப்போது ஐ.தே.க. வழங்கும் வாக்குறுதியை நம்ப முடியுமா என்ற கேள்வி எழுகிறது. அத்தோடு, பொதுஜன முன்னணியிலிருந்த இனவாத கும்பல் இப்போது ரணிலோடு இணைந்திருக்கிறது.

அதேபோல், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவேன் என்று சஜித் பிரேமதாச கூறுகிறார். அவரோடு இணைந்திருக்கும் சில பௌத்த பிக்குகளைப் பார்க்கும் போது, அவரால் அதனைச் செய்ய முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

தாம் 13ஆவது திருத்தம் பற்றியோ சமஷ்டி பற்றியோ வாக்குறுதி அளிக்கப் போவதில்லை என்றும் இனங்களிடையே சமத்துவத்தைப் பேணி நடந்து கொள்வேன் என்றும் அனுரகுமார திஸாநாயக்க கூறுகிறார். இதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதாக இருந்தாலும், அது இலகுவானதாக இருக்காது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றால் கிடைத்த பணத்திலேயே தற்போது நாட்டின் பொருளாதாரம் இயங்குகிறது. அதற்கு ரணில் உரிமை கோரினாலும், நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் கோட்டாபய ராஜபக்ஷவே ஆரம்பித்தார்.

அந்நிதியத்தின் ஆலோசனைகளே அன்றி அரசாங்கத்தின் எந்தவோர் ஆலோசனையும் தற்போதைய நிலைக்குக் காரணமாகவில்லை. எவர் பதவியிலிருந்தாலும் 2027இலிருந்து இலங்கை தமது வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அதற்காக எந்தவொரு வேட்பாளரிடமும் திட்டம் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, தமிழராக இருந்தாலும் சிங்களவராக இருந்தாலும் முஸ்லிம்களாக இருந்தாலும் மூன்றாண்டுகளில் வரப் போகும் மற்றுமொரு பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். இறுதியில் எவர் ஊழலில் குறைந்தவர் குறைவாக ஏமாற்றக்கூடியவர் என்பதன் அடிப்படையில் மட்டுமே வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## கடிதங்கள்

### மாற்றுக் காணியை தாருங்கள்

ஒலுவில் பிரதேசத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள பொன்னன்வெளி கண்ட விவசாயக் காணிகளுக்கு மாற்றுக் காணி மற்றும் நஷ்டஈடு வழங்குமாறு, பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள மகஜரில்,

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையைச் சாதகமாக பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு சொந்தமான சுமார் 200 ஏக்கர் நெற்செய்கை காணி கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 75 குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்காணியை வழங்குவதற்கு ஒலுவில் பாலையடிவட்டை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டு, காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த வேளையில் திடீரென நிறுத்தப்பட்டது. மேலும், இக்காணிகளுக்கு மாற்றுக் காணி வழங்குமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் எவ்வித நடவடிக்கைகளும் இது வரை எடுக்கவில்லை. உங்களது ஆட்சியில் தற்போது காணி இழந்தவர்களுக்குக் காணி வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு காணிகள் மீள வழங்கப்பட்டுவருவதனை பாராட்டுகின்றோம்,

எனவே, எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்டுள்ள பொன்னன்வெளி கண்ட விவசாயக் காணிகளுக்கு மாற்றுக் காணி மற்றும் நஷ்டஈடு வழங்குமாறு அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- எம்.எஸ்.எம்.ஹனீபா



## வானிலை நிகழ்வுகளுக்கு

# காற்று வழிவகுக்கும்



ல.மயூரன்
BA.MA.Mphil[R]

(செவ்வாய்க்கிழமை தொடர்ச்சி)

காலநிலை மற்றத்தின் காரணமாக படிவு வீழ்ச்சியின் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படுமாயின் பல பாதிப்புகளை விவசாய நடத்தைகள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். குறிப்பாக நீர் சார்ந்த பிரச்சினைகளை அதிகமாக சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். நீரியல் வட்டச் செயற்பாட்டில் ஒரு கூறாகக் காணப்படும் படிவு வீழ்ச்சி செயன்முறையில் மாற்றம் ஏற்படுமாயின் பல நாடுகள் பல்வேறு வகையான இயற்கை அனர்த்தங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இவ்வனர்த்தங்கள் பல உயிரினங்களின் வாழ்விடத்தை அழிப்பதோடு மட்டுமல்லாது, அவற்றின் இயல்பு வாழ்கையை மாற்றிவிடும். மனிதர்களின் பொருளாதார நடத்தைகள், உணவு உற்பத்திகளான விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி செயற்பாடுகள் என்பவற்றிற்கும் இவை தடையாக அமையும் இதனால் வருவாயின் பெரும் பகுதியை உணவுக்காக இழக்க வேண்டிய நிலையை மனிதகுலம் சந்திக்கும்.

படிவு வீழ்ச்சியின் காரணத்தினால் மண்ணீர் அதிகரித்தல் அல்லது மேலதிகமான நீரினால் நிரப்பப்பட்டால் அப்பிரதேசம் நீரினால் மூடப்பட்டு இருக்கும் இதனை நீர்தேங்குதல் எனக்கூறலாம் (*Waterlogging*). இச்செயற்பாட்டினால் பயிர்களின் வளர்ச்சி வேகம் கட்டுப்படுத்தப்படுவதோடு, அவற்றின் நோய்தாக்கும் விகிதமும் அதிகரித்துக் காணப்படும். தாவரங்கள் தமக்குத் தேவையான ஒட்சிசனை (02) வேர்களுமாகப் பெற்றுக்கொள்ளும் அளவு குறைக்கப்படும். மேற்பரப்பு மணலில் காணப்படும் உயிரினங்கள் தன்னிடம் விட்டு நகர்ச்சியடைத் தொடங்கும். அதனால் இயற்கையாக கிடைக்கப்பெறவேண்டிய ஊட்டச்சத்துக்கள் குறைவடையத் தொடங்கும். இதனைத் தொடர்ந்து தாவரங்களின் அல்லது பயிர்களின் வளர்ச்சி நிலை குறைவடைந்து செல்லும்.

படிவு வீழ்ச்சியின் அளவு அதிகரிக்கும் பொழுது, வெள்ள அனர்த்தம் ஏற்படும். அவை பயிர்களின் விழை நிலப்பரப்பை மூழ்கடிக்கும் அதனால் பயிர்கள் நீரில் மூழ்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படும். பயிர்கள் நீரினால் மூழ்கடிக்கப்படும் பொழுது அவற்றின் இலைகள், தண்டு, வேர், பூக்கள் மற்றும் காய்கனிகள் அழுகல் நிலைக்குத் தள்ளப்படும். பங்கசு நோய்களின் தாக்கத்திற்கு அதிகம் உட்படக்கூடிய நிலை ஏற்படும். தாவரங்களின் வளர்ச்சி நிலையை முழுமையாகக் கட்டுப்படுத்துவதுடன், அவற்றின் உயிர்ப்பு காலம் குறைந்து விடும்.

குறுகிய காலப்பகுதியில் படிவு வீழ்ச்சியின் அளவு அதிகரிக்கும் பொழுது பயிர் செய்கைக்குரிய நிலப்பரப்பு கழுவிச் செல்லப்படும் அதன் காரணத்தினால் கனிப் பொருட்கள் ஓர் இடத்திலிருந்து மற்றுமொருமிடத்திற்கு நகர்த்தப்படும். இச்செயற்பாட்டின் மூலம் குறித்தவொரு பகுதி அதிக வளம் பெற்ற மணலாக மாற்றம் பெறும் அல்லது முழுமையாக வளம் இழந்த மணலாக மாற்றம் பெறும். மண்ணில் இயல்பாகக் காணப்படும் கட்டமைப்பு மாற்றம் பெற்று புதிய கட்டமைப்புடைய மணல் மேற்பரப்பு தோற்றம் பெறும். கழிமுகப் பகுதிகளில் வெள்ளத்தினால் கொண்டுவரப்பட்ட படிவுப் பொருட்கள் அதிகம் படியவிடப்படும். படிவு வீழ்ச்சி குறைவாகக் கிடைக்கும் பிரதேசங்களில் வறண்ட தன்மை தோன்றும். அப்பகுதியில் உள்ள மணற்பரப்பு உலர்ந்த தன்மை கொண்டவையாகக் காணப்படுவதால் அவற்றை வேகமாக வீசும் காற்று இலகுவாக எடுத்துச் செல்லும். படிவு வீழ்ச்சி குறைவாகக் காணப்படும் பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் இதனால் மணல் பகுதி அள்ளிச் செல்வது மிகவும் இலகுவான காரணியாக மாற்றம் பெறும் இதனால் அப்பிரதேசம் மிக வேகமாகக் காற்றின் தின்னல் செயற்பாட்டிற்கு உட்படும் பகுதியாக மாற்றம் பெறும். எனவே, பயிர்ச் செய்கை என்பது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ள முடியாத சூழல் காணப்படும்.

மணல் பரப்பில் 25% மான பகுதி வளி நிரம்பியவையாகவும் 25% மான பகுதி நீர் நிரம்பிய பகுதியாகவும் காணப்படவேண்டும் அவ்வாறு காணப்படும் மணல் சிறந்த மணலாகக் கருதப்படும். இவ்விகித வகைப்பாட்டில் அதிகரித்த அல்லது குறைவடைந்த தன்மை காணப்படும் சந்தர்ப்பத்தில் அவை தாவர வளர்ச்சிக்கு ஏற்ற மணல் பகுதியாகக் காணப்படாது. அதிக படிவு வீழ்ச்சி மணல் நீர் அளவை அதிகரிக்கும், அதிக வெப்பம் மணல் வளியை அதிகரிக்கும். இவ்வாறு காலநிலை காரணிகளில் ஏற்படும் மாற்றம் மணலின் பௌதீக கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த அவை பயிர்களின் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்தும். காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றாகக் காணப்படுவது நிச்சயமற்ற வானிலை எதிர்வு கூறல் ஆகும். பருவகாலத்தின் நிச்சயமற்ற தன்மை பயிர் வளர்ச்சியிலும் விளைச்சலிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பயிர்செய்கை ஆரம்பிக்கும் காலப்பகுதிக்கும் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்குமான காலத்திற்கும். இடையே மாறுபாடு காணப்படும் பொழுது பயிர்களின் விளைச்சலிலும் அதன் தாக்கம் காணப்படும்.

வளிமண்டல ஈரப்பதனில் ஏற்படும் மாற்றம் தாவரங்களின் ஆவியுயிர்ப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும். அதிக வெப்பத்தினால் தாவரம் இலை, தண்டு மூலம் நீரை இழக்கும் அதனால் தாவர உடல் சோர்வடைந்து காணப்படும். உயிரினங்களின் உடல் பகுதிகளிலிருந்து ஆவியாக்கப்படும் செயன்முயை ஆவியுயிர்ப்பு எனப்படும். அதிக ஈரப்பதன் காணப்படும் சந்தர்ப்பங்களில் ஆவியுயிர்ப்பு செயன்முறை மிகக்குறைவாகக் காணப்படும். இது குறைந்த நீர் இழப்பையும், தாவரத்தின் நீர் அழுத்தத்தையும் குறைத்துவிடும். குறைவான ஈரப்பதன் காணப்படும் பொழுது ஆவியுயிர்ப்பு அதிகரிக்கும் இதனால் தாவர நீர் இழப்பு அதிகரிக்கும். இதன் காரணத்தினால் தாவரங்கள் தம்மைச் சுருக்கிக்கொள்ள முயற்சி செய்யும். குறிப்பாகத் தாவரங்களின் புதிய இலைகளுக்கான உருவாக்கத்தைக் குறைத்துக்கொள்ளும், பூத்தல், காய்த்தல் செயற்பாடுகளையும் குறைத்துக் கொள்ளும். தாவர இலைவாயில் மூடுதல் அல்லது திறத்தல் செயற்பாடு (*Stomatal Regulation*) கட்டுப்படுத்தப்படும். இலைகளின் மேற்பரப்பில் காணப்படும் இலை வாயில்கள் தாவரங்களின் சுவாச செயற்பாட்டிற்கும், ஒளித்தொகுப்பு செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாயில்களின் ஊடாக தாவரங்கள் தமக்குத் தேவையான 02 ,C02 பெற்றுக்கொள்கின்றன. அதிகமான ஈரப்பதன் கிடைக்கும் காலப்பகுதியில் தாவரங்கள் தம்முடைய இலை வாயில்களை மூடிவிடுகின்றன இதனால் ஒளித்தொகுப்பு செயன்முறையின் உறிஞ்சுதல் செயற்பாடும், சுவாசசெயட்;பாடும் பாதிப்படைகின்றது அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றது. அதனால் அவை தாவர வளர்ச்சியில் பாரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

தாவர சுவாசம் வளிமண்டல ஈரப்பதனின் அளவுடன் நேரடியான தொடர்பைக் கொண்டுள்ளன. குறிப்பாக அதிகமான ஈரப்பதன் காணப்படும் பிரதேசத்தில் காணப்படும் தாவரங்கள் தமது இலை வாயில்களை மூடிக்கொள்கின்றன . இதனால் பகல் பொழுது ஒளித் தொகுப்பு செயற்பாடும், .இரவுப்பொழுதில் சுவாச செயற்பாடும் பாதிப்புக்குள்ளாகும். தாவரத்தின் இலை வாயில்கள் மூடப்படுவதன் காரணமாகத் தாவர திசுக்களில் நீர்த் தன்மை அதிகரித்து பூஞ்சைகள், பாக்டீரியாக்களின் நோய் தாக்கம் அதிகரிக்கும். ஈரப்பதன் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் வறண்ட வலயத்துக்குரிய நோய்களின் தாக்கம் ஏற்படுத்தப்படும். தாவரங்களின் விதைகளின் முளை திறன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈரப்பதனின் செல்வாக்கு முக்கிய இடம் பெறுகின்றது . அதிகமான ஈரப்பதன் காணப்படும் சந்தர்ப்பத்தில் விதை இனங்களைப் பாதுகாப்பது என்பது மிகக்கடினமான விடயமாக விவசாயிகளுக்குக் காணப்படும். அதிக ஈரப்பதன் காரணமாக விதை இனங்கள் மிகவேகமாக நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படும் விதைகளின் மேற்பரப்பு பங்கசு நோய்களினால் அதிக பாதிப்புக்குள்ளாகும். விதைகளை விதைப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் முன்பே அவை வளர்ச்சியடையத் தொடங்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படும் .

சுருக்கமாகக் கூறுவதாயின் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வளிமண்டல ஈரப்பதன் மாற்றம் தாவர வளர்ச்சியில் எதிர்மறையான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடிய விவசாயிகளாக நாம் காணப்படுவோம். வெப்பநிலையின் மாற்றம் வளியில் காணப்படும் ஈரப்பதனில் மாற்றத்தை ஏற்படுத்தும். இம்மாற்றம் தாவரங்களின் வளர்ச்சியில் பலவிதமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக விளைச்சலை அதிகரிக்க, வளர்ச்சியை அதிகரிக்க, மகரந்த செயர்க்கைக்கான வினைத் திறனை அதிகரிக்கத் தாவரங்கள் போராடவேண்டும். தாவரங்களின் இப்போராட்டம் தோல்வி கண்டதாகக் காணப்படும் பட்சத்தில் பல தாவர இனங்களை இவ்வுலகு இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். வளிமண்டலத்தில் காணப்படும் வெப்ப உயர்வு அதிகமான ஈரப்பதனை உறிஞ்சிக்கொள்ளும். இச் செயற்பாடு நிகழ்த்தப்படும் பொழுது வானிலை நிகழ்வுகள் எதிர்வு கூறிக்கொள்ள முடியாத அளவு மாற்றமடையும்.

*Clausius-Clapeyron* கோட்பாட்டுகளுக்கு அமைய 1°C வளிமண்டலத்தில் அதிகரித்தால் வளிமண்டல ஈரப்பதன் 7% சதவீதம் அதிகரிக்கும்.

(வியாழக்கிழமை தொடரும்...)

## இன்றைய நவீன உலகில்

# ஆயுள் முழுக்க கல்வி





அப்துல் நயீம் மொஹமட் ஹிசாம்,
இரண்டாம் வருட சிறப்பு கற்கை மாணவன்,
பிள்ளை நலத்துறை,
இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

“வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொள்ளைதான் இயலாது” என்று கல்வியின் உடைய சிறப்பு பற்றி விவேக சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில், மனித இனம் தோன்றி இற்றைக்கு ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆகின்றன. அன்று தொடக்கம் இன்று வரை உலகம் வரலாறு காணாத வளர்ச்சியை எட்டி உள்ளது என்றால் அது மிகையாகாது. இவை அனைத்திற்கும் காரணம் எது அல்லது எவை என்று நாம் ஆராய்ந்தது உண்டா? இவை அனைத்திற்கும் அடித்தளமாக அமைந்தது கல்வி என்றால் அது மிகையாகாது. இவ்வாறு சிறப்பு வாய்ந்த இக் கல்வியானது வெறுமனே பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை மாத்திரம் இருக்கக் கூடாது. மனிதனின் கருவறை தொட்டு கல்லறை வரைக்கும் இக் கல்வியானது அமைய வேண்டும் இதனையே கல்விமான்கள் வாழ்நாள் நீடித்த கல்வியெனக் கூறுகின்றார்கள். ஒரு மனிதன் தான் பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரை தன்னால் இயலுமான விடயங்களை கற்பானாயின் அது வாழ்நாள் நீடித்த கல்வி ஆகும். இந்த கல்வியை கற்பதற்கான காலம் வயது என்பவற்றைக் கணக்கிட முடியாது. சோக்ரட்டிஸ் கூறும் போது, ‘நான் இளைஞனாக இருக்கும் போது எனக்கு எல்லாம் தெரியும் என நினைத்தேன். முதுமை நிலை அடையும் போதே எனக்கு எதுவும் தெரியாத என்று அறிந்தேன்’ என கூறுகின்றார்.

இக்கல்வியை கற்பதற்கான காலம் வரையறுக்க முடியாதது இதை தான் பழந்தமிழ் பெண் புலவர் ஔவையார் கூறியுள்ளார் “கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு” என்று அதாவது எத்தகைய புலமை படைத்தோனும் தான் அறிந்தவற்றை ஆராய்ந்து பார்த்தால் தான் கற்கவேண்டியது உலகத்திற்கு ஒப்பாகவும் கற்றறிந்தது கையளவும் ஆகத்தான் இருக்கும்.

தற்போதைய நிலையில், வாழ்நாள் முழுவதும் கற்றல் என்பது வாழ்க்கைக்கான முழுமையான அணுகுமுறையாகக் காணப்படுகிறது. இது தொழில்முறை வளர்ச்சியைப் பற்றியது மட்டுமல்ல, தனிப்பட்ட செறிவூட்டலும் ஆகும். அது ஒரு புதிய பொழுதுபோக்கைத் தேர்ந்தெடுப்பது, உலகளாவிய கலாச்சாரங்களைப் புரிந்துகொள்வது அல்லது தொழில்நுட்பப் போக்குகளுடன் புதுப்பித்த நிலையில், இருப்பது எதுவாக இருந்தாலும், கற்றல் ஒரு தொடர்ச்சியான பயணம் என்பதை நவீன நபர் அங்கீகரிக்கிறார், இது அவர்களின் இருப்பின் ஒவ்வொரு அம்சத்தையும் வளப்படுத்துகிறது.

மேலும் ஒரு மனிதன் பாடசாலை சென்றாலும் செல்லாவிட்டாலும் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கின்றான். குழந்தைகள் பாடசாலை செல்லும் முன்னரே மொழியைச் சற்று பயின்று கொள்கிறார்கள். உணவு உண்ணவும் விளையாடவும் கற்கின்றார்கள். பாடசாலை செல்லாதவர்கள் கூட பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, செய்திப் படம், கருத்தரங்குகள், பட்டிமன்றம், சொற்பொழிவுகள் போன்ற வழிமுறைகள் மூலம் நாட்டு நடப்பு போன்ற பல விடயங்களை கற்கின்றார்கள். ஒரு பரந்த பொருளில் இவை அனைத்தும் கல்வி என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறான முறையில் கல்வியைப் பெறுபவர்கள் தாங்கள் தெரிந்தும் தெரியாமலும் தமது அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள். ஆனால், இவ்வாறான ஒரு கற்றல் செயல்பாட்டை யாரும் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை ஆராய முற்படுவதும் இல்லை, ஆயினும், இவ்வாறான கற்றலில் ஒரு தொடர்ச்சியும் அமைப்பும் இருப்பதில்லை என்பது உண்மையே! வாழ்க்கை நீடித்த கல்வி என்ற நவீன கோட்பாடு இவ்வாறான இயல்பான கற்றலுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகின்றது. அத்துடன், கல்வி கற்றலுக்கான புதிய குறிக்கோள்களையும் வழங்கி வாழ்நாள் முழுவதும் மனிதன் கல்வி கற்பதை இலகு படுத்துகின்றது. இந்த வாழ்நாள் நீடித்த கல்வியானது பிரதானமாக இரண்டு வகைகளில் இடம்பெறுகின்றது. முதலாவதாக ஆசிரியர்கள் பாடங்களைத் திட்டமிட்டு மாணவர்களுக்குப் பாடசாலை, பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்கள் போன்ற நிலைமைகளில் கல்வியை வழங்குகின்றனர். இது முறைசார் கல்வியென கல்விசார் அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. இரண்டாவதாக ஆசிரியரின் தலையிடும் உதவியும் இன்றி, மாணவர்கள் தங்களாகவே கற்றலில் ஈடுபடல். இது முறை சாரா வழிமுறை என்றும் அழைக்கப்படுகின்றது.

இலத்திரனியலோடு இயங்கிக் கொண்டிருக்கும் 21ஆம் நூற்றாண்டில் வாழ்நாள் நீடித்த கல்வி என்பது மனித இனத்திற்குக் கட்டாயத் தேவையாக உள்ளது. அந்த வகையில், வாழ்நாள் நீடித்த கல்வியின் முக்கியத்துவத்தையும் அதன் விளைவுகளையும் நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியதும் ஏனையவர்களுக்கு அதனைப் புரிய வைக்க வேண்டியதும் ஒவ்வொரு கற்றல் ஆர்வம் உள்ளவர்களின் கட்டாய கடமையும் கடப்பாடுமாகும். எனவே வாழ்நாள் நீடித்த கல்வி ஏன் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவசியம் என்ற நோக்குவோம். ஆனால், உலக மாற்றங்களுக்கு ஏற்ப ஒரு மனிதன் தன்னை மாற்றிக் கொண்டு உலகத்தோடு இணைந்து வாழ ஒரு மனிதன் கட்டாயமாக வாழ்நாள் நீடித்த கல்வியைத் தொடர வேண்டும். இதனையே திருவள்ளுவர் அன்று “எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு அவ்வ துறைவது அறிவு” என்றார். மேலும், வாழ்நாள் நீடித்த கல்வி மூலம் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளல், சமூகத்தில் நிலைத்திருத்தல், சமூக வளர்ச்சிக்கு பங்காற்றல், சிறந்த பிரஜைகளை உருவாக்குதல் போன்ற நன்மைகளையும் வாழ்நாள் நீடித்த கல்வி மூலமாகப் பெறமுடியும். இதற்கு மேலதிகமாக அறிவாற்றல், மன விடுதலை, பண்பாட்டு அடையாளம், தனிப்பட்ட வளர்ச்சி, ஆரோக்கியமான வாழ்க்கையைச் சரியாக அமைத்துக் கொள்வது போன்றவற்றில் சிறந்த தீர்மானங்களையும் சரியான நடைமுறைகளையும் பின்பற்ற வாழ்நாள் நீடித்த கல்வியானது அவசியமாகக் காணப்படுகின்றது.

அடுத்ததாக வாழ் நாள் நீடித்த கலவியில் தொழினுட்பம் பாரிய பங்கு வகிக்கிறது. அதாவது மின் கற்றல் தளங்களின் எழுச்சி புரட்சிகரமானது அல்ல. உயர்தர நிறுவனங்களின் சுவர்களுக்குள் தரமான கல்வி மட்டுப்படுத்தப்பட்ட நாட்கள் போய்விட்டன. *Coursera, Udemy* போன்ற தளங்கள், உலகின் அனைத்து மூலைகளிலிருந்தும் கற்கும் மாணவர்களுக்குச் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் நிபுணர்களிடமிருந்து படிப்புகளை அணுக அனுமதிக்கும் வாயில்களைத் திறந்து விட்டன. நீங்கள் டோக்கியோவில் குவாண்டம் இயற்பியலைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் இளைஞராக இருந்தாலும், அல்லது டிஜிட்டல் மார்க்கெட்டிங்கில் ரியோவில் இருந்து ஓய்வு பெற்றவராக இருந்தாலும், இந்த தளங்கள் விளையாட்டுக் களத்தைச் சமன் செய்கின்றன. அவை நெகிழ்வானவை, வெவ்வேறு கற்றல் பாணிகளை வழங்குகின்றன, மேலும் வினாடி வினாக்கள், சக மதிப்புரைகள் மற்றும் மன்றங்கள் போன்ற ஊடாடும் கூறுகளுடன் அடிக்கடி வருகின்றன. கற்றல் அனுபவத்தை வளமானதாகவும் ஈர்க்கக்கூடியதாகவும் ஆக்குகின்றன. இதன் மூலம் அனைவரும் எவ்வித வயது கட்டுப்பாடு இன்றி, வாழ் நாள் முழுவதும் கல்வியை கற்கலாம். இது வாழ் நாள் நீடித்த கல்விக்கு புதிய ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

மேலும், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திர கற்றல் பெருகிய முறையில் அதிநவீனமானது, அவை வாழ்நாள் முழுவதும் கற்றலில் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்குகின்றன. இந்த தொழில்நுட்பங்கள், தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் பாதைகளை ஒழுங்கமைக்க ஒரு கற்பவரின் நடத்தை, பலம் மற்றும் முன்னேற்றத்தின் பகுதிகளைப் பகுப்பாய்வு செய்யலாம். உங்கள் கற்றல் வேகத்தைப் புரிந்துகொள்ளும் ஒரு தளத்தைக் கற்பனை செய்து பாருங்கள், உங்களுக்குத் தேவைப்படும்போது ஆதாரங்களை வழங்குகிறது, மேலும் நீங்கள் போராடக்கூடிய பகுதிகளைக் கூட கணித்து, கூடுதல் ஆதரவை வழங்குகிறது. தனிப்பயனாக்கத்தின் இந்த நிலை கற்றல் திறமையானது, பொருத்தமானது மற்றும் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது என்பதை உறுதி செய்கிறது.

இவ்வாறே வாழ்நாள் நீடித்த கல்வியின் நவீன போக்கு காணப்பட்டாலும் இதற்கு பல்வேறு தடைகளும் காணப்படுகின்றன. உதாரணமாக நேரமின்மை, நேரக் கட்டுப்பாடு, நிதிப் பற்றாக்குறை, ஊக்கமின்மை, தகவல் சுமை, பயம் போன்றன வாழ்நாள் நீடித்த கல்விக்கு பெரும் தடையாகக் காணப்பட்டு வருகின்றது. இவ்வாறான பல்வேறு தடைகள் காணப்பட்டாலும் இன்றைய நவீன உலகில் வாழ்நாள் நீடித்த கல்வியின் தேவை அதிகமாகக் காணப்படுவதால் ஒவ்வொருவரும் வாழ்நாள் நீடித்த கல்வி பழக்கத்தை வளர்க்க வேண்டும் இதற்குத் தெளிவான இலக்குகளை அமைத்தல், கற்றல் வலை அமைப்பை உருவாக்குதல், வழக்கமான பிரதிபலிப்பு, பிரத்தியேக கற்றல் இடத்தை உருவாக்குதல், பல்வேறு கற்றல் முறைகளை இணைத்தல், நிலைத்த தன்மையை உறுதி செய்தல், ஆர்வத்தைத் தழுவுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வோமானால் வாழ்நாள் நீடித்த கல்வியைத் தொடரலாம்.

அவ்வாறே இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வாழ்க்கை நீடித்த கல்வி ஏற்பாடுகளை செவ்வனே செய்துகொள்ள ஒரு முக்கிய வழி, நாடு முழுவதும் பரந்த ரீதியில் சமூக நூல் நிலையங்களை நிறுவுவதாகும். இவை சமூகத்தின் அறிவு வள நிலையங்களாக விருத்தி செய்யப்படுதல் வேண்டும். ஏராளமான நூல்கள், சஞ்சிகைகள், ஒலிப்பதிவு-ஒளிப்பதிவு நாடாக்கள் போன்றவற்றைக் கொண்டவையாக இந்நிலையங்கள் அமைதல் வேண்டும். விரிவுரைகளையும் கலந்துரையாடல்களையும் நடாத்தவும் வானொலி, தொலைக்காட்சி, ஒளிப்பதிவு நிகழ்ச்சிகளை வானொலி, பார்க்கவும் தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும். இளைஞர்களும் வளர்ந்தோரும் பங்கு கொள்ளக்கூடிய கற்றல் நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெறல் வேண்டும்.

முடிவில், வாழ்நாள் நீடித்த கல்வி என்பது வெறும் வார்த்தை அல்லது போக்கு அல்ல அது ஒரு வாழ்க்கை முறை. ஒவ்வொரு அனுபவமும், ஒவ்வொரு சவாலும், ஒவ்வொரு கணமும் கற்றுக் கொள்ளவும் வளரவும் ஒரு வாய்ப்பு என்பதை ஒப்புக் கொள்ளும் ஒரு தத்துவம். நம்மைச் சுற்றியுள்ள உலகம் முன்னோடியில்லாத வேகத்தில் உருமாற்றமடைந்து வருவதால், நாம் அனைவரும் வாழ்நாள் நீடித்த கல்வி உணர்வைத் தழுவி, அறிவு, திறன்கள் மற்றும் எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் கருணையுடனும் வழிநடத்துவதற்கு ஏற்றவாறு நம்மை ஆயுதபாணியாக்குவோம்.

“வாழ்க்கை முழுவதும் கல் வாழ்க்கையை முழுவதுமாய் கல்”


டெங்கு நோயை கட்டுப்படுத்தும்

# ‘கியூ டெங்கா’ தடுப்பூசி

டெங்கு நோயை குறைப்பதில் ‘கியூடெங்கா’ தடுப்பூசி 50 சதவீதத்துக்கும் மேல் பலனளிப்பதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பால் கடந்த மே மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்ட கியூடெங்கா தடுப்பூசி, நோயாளிகளுக்கு டெங்குவில் இருந்து நீண்டகால பாதுகாப்பு வழங்கும் திறனைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் கியூடெங்கா தடுப்பூசியை செலுத்திக்கொண்ட 20,000-க்கும் மேற்பட்ட நபர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. ஆசியாவிலிருந்து 13 ஆய்வுகளும் அமெரிக்காவிலிருந்து 6 ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட தரவுகளைக்கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.




அந்த ஆய்வறிக்கையில், ஒட்டுமொத்தமாக இந்த ஆய்வில் பங்கேற்ற 20,000 பேரில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு டெங்குவை எதிர்கொள்ளும் சிறந்த மற்றும் நீண்டகால பாதுகாப்பை கியூடெங்கா வழங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டது.


மேலும், இத் தடுப்பூசியை செலுத்திக் கொண்டோருக்கு நல்ல முடிவுகள் தந்திருந்தாலும், அதன் செயல்திறன் மற்றும் பாதுகாப்பு குறித்த விரிவான மதிப்பீடுகள் தற்போது வரை இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கியூடெங்கா தடுப்பூசியை தயாரிக்க டகேதா நிறுவனத்துடன் ஹைதராபாத்தைச் சேர்ந்த ‘பயாலாஜிக்கல் இ நிறுவனம்’ ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வொஷிங்டன்

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர்:

## உறுதி செய்தது நாசா



செவ்வாய் கிரகத்தின் நிலப்பரப்பிற்கு அடியில் திரவ வடிவில் தண்ணீர் உள்ளதாக நாசாவின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் நாசா, செவ்வாய் கிரகத்திற்கு ‘இன்சைட்ஸ் லாண்டர்’ என்ற விண்கலத்தை அனுப்பி ஆய்வு செய்து வருகிறது. அந்த விண்கலமானது, அங்கு சீஸ்மிக் அலைகளை ஆய்வு செய்து வரும் நிலையில், செவ்வயில் 1,319 பூகம்பம் ஏற்பட்டதை பதிவு செய்துள்ளது.

மேலும், சீஸ்மிக் அலைகளின் வேகத்தை வைத்து, பூமிக்கு அடியில் பல வளங்கள் இருக்க வாய்ப்பு உள்ளதாக விஞ்ஞானிகள் கணித்து உள்ளனர். முன்பு நடந்த ஆய்வில் அந்த கிரகத்தில் உறைந்த நிலையிலும், அதன் வளிமண்டலத்தில் நீராவி இருந்தது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், புதிய ஆய்வில் செவ்வாய் கிரகத்தின் அடிப்பகுதியில் திரவ வடிவில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முந்தைய காலங்களில் செவ்வாய் கிரகத்தில் ஆறுகள் மற்றும் ஏரிகள் இருந்தன என்பதை நிரூபிக்கும் நீர் தடங்கள் இருந்துள்ளன. ஆனால், அங்கிருந்த வளிமண்டலம் பறிபோனதால், அங்கு இருந்த தண்ணீர் அனைத்தும் ஆவியாகி 300 கோடி ஆண்டுகளாக செவ்வாய் கிரகம் பாலைவனமாக உள்ளது.

அமெரிக்கா

கமலா ஹாரிஸை

## விவாதத்திற்கு அழைத்த எலான் மஸ்க்

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தொடர்ந்து, ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸையும் நேர்காணல் செய்வதற்கு தயார் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து, குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் களம் காண்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில், ட்ரம்பை ஆதரிப்பதாக அறிவித்த உலகின் முன்னணி தொழிலதிபர் எலான் மஸ்க் ட்ரம்பின் தேர்தல் நிதியாக 375.80 கோடி ரூபாய் வழங்கியுள்ளார். இந்நிலையில், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும், குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப்பை எலான் மஸ்க் நேற்று நேர்காணல் செய்தார். அதில் பல கேள்விகளுக்கு டிரம்ப் பதிலளித்தார்.

இந்த நேர்காணலில் கமலா ஹாரிஸ் குறித்து அவர் பேசும்பொழுது, “கமலா



ஹாரிஸ் அமெரிக்காவை அழித்து விடுவார். அவருடைய பொருளாதாரச் சிந்தனைகள் நாட்டுக்குக் கேடு விளைவிக்கும். ஏற்கெனவே பணவீக்கத்தால் அமெரிக்கப் பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. அமெரிக்கர்கள் மத்தியில் சேமிப்பு குறைந்துவிட்டது. மேலும் அமெரிக்கர்கள் கடன் வாங்கி செலவழிக்க ஆரம்பித்துவிட்டனர். கமலா ஹாரிஸ் ஜனாதிபதியானால் இது மேலும் மோசமாகும். அவரை வரவேற்றுள்ள சட்டவிரோத நபர்களின் எண்ணிக்கை நாம் நினைப்பதை விட அதிகம். அவரைத் தேர்ந்தெடுத்தால் நாட்டில் வணிகம் இல்லாமல் போய்விடும்” என கமலா ஹாரிஸை தாக்கிப் பேசினார்.

இந்நிலையில், ‘கமலா ஹாரிஸை நேர்காணல் செய்வதில் மகிழ்ச்சி’ என எலான் மஸ்க் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தருமபுரி

## சிசுவின் பாலினத்தை கண்ட இருவர் கைது



கருவில் உள்ள சிசுவின் பாலினத்தை கண்டறிந்த இருவரை பொலிஸார் கைது செய்து, அவர்களிடமிருந்து ரூ. 18,000 பணத்தை பறிமுதல் செய்தனர்.

தருமபுரி மாவட்டம், மகேந்திரமங்கலம் அடுத்த சீங்கேரி கூட்ரோடு அருகே உள்ள வீட்டில் சட்டவிரோதமாக கர்ப்பிணிகளின் வயிற்றில் உள்ள சிசுவின் பாலினம் கண்டறிந்து, பெண் குழந்தையாக இருந்தால் கருக்கலைப்பு செய்வதாக சுகாதாரம் மற்றும் ஊரக நல பணிகள் இணை இயக்குநர் மருத்துவருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து இணை இயக்குநர் உள்ளிட்ட

> **“ பெண் குழந்தையாக இருந்தால் கருக்கலைப்பு செய்வதாக சுகாதாரம் மற்றும் ஊரக நல பணிகள் இணை இயக்குநர் மருத்துவருக்கு இரகசிய தகவல் கிடைத்தது**

குழுவினர் அப்பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது, 4 பேர் கொண்ட குழுவினர் கர்ப்பிணிகள் வயிற்றில் உள்ள சிசுவின் பாலினம் கண்டறிந்தது தெரியவந்ததையடுத்து, அவர்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைகப்பட்டனர்.

அவர்களை கைது செய்த பொலிஸார், இதுபற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொல்கத்தா

பெண் மருத்துவர் கொலை:

## போராட்டம் தீவிரம்




பெண் மருத்துவர் மரணத்துக்கு நீதி கோரி மேற்கு வங்கம் முழுவதும் மருத்துவர்கள், செவிலியர்கள் பணியை புறக்கணித்து தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கொல்கத்தா ஆர்ஜி கார் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி பயிற்சி மருத்துவ மாணவி படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரின் உடற்கூராய்வின் முடிவுகள், மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்தது.

இந்நிலையில், மருத்துவரின் இறப்பிற்கு நீதி கேட்டு நாடு முழுவதும் பல இடங்களில் மருத்துவர்கள், செவிலியர் தரப்பில் போராட்டம் வெடித்துள்ளது.

மருத்துவர்களோடு பாஜக, காங்கிரஸ், இடதுசாரி கட்சிகளும் ஆளும் திரிணமூல் அரசுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வருகின்றன. இதனால் மேற்குவங்கத்தில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது.

கண்காட்சிப் போட்டியில்

# மொனாக்கோவிடம் தோற்றது பார்சிலோனா




ஸ்பானிய லா லிகா பருவகாலத்தை ஆரம்பிப்பதற்கு முன்பதான கண்காட்சிப் போட்டியான ஜோன் காம்பர் கிண்ணப் போட்டியானது பார்சிலோனா ஒலிம்பிக் அரங்கில் திங்கட்கிழமை (12) நடைபெற்றபோது 0-3 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோவிடம் பார்சிலோனா தோற்றது.

இவ்வாண்டில் எஞ்சியுள்ள அனைத்து டெஸ்ட்களிலும்

## ஷகிப் விளையாடுவார்



இவ்வாண்டு நடைபெறவுள்ள அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் விளையாடுவாரென தலைமைத் தேர்வாளர் கஸி அஷ்ரஃப் ஹொஸைன் திங்கட்கிழமை (12) தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டில் பாகிஸ்தான், இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுடன் தலா இரண்டு போட்டிகளில் விளையாடவுள்ளது.

> **“ கடந்த இரண்டு ஆண்டுகளில் எட்டு டெஸ்ட்களில் நான்கிலேயே ஷகிப் விளையாடியதுடன், கனடா இருபதுக்கு 20 தொடரிலிருந்து நேரடியாக அணியுடன் இணையவுள்ளார். தவிர கண்ணில் பிரச்சினையையும் ஷகிப் கொண்டுள்ளார்**

முன்னதாக பாகிஸ்தானுக்கெதிரான தொடரில் மாத்திரமே விளையாடவுள்ளதாகவும், இந்தியாவுக்கெதிரான தொடரில் விளையாடுவது குறித்து தீர்மானிக்கவில்லையென ஷகிப் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் எட்டு டெஸ்ட்களில் நான்கிலேயே ஷகிப் விளையாடியதுடன், கனடா இருபதுக்கு 20 தொடரிலிருந்து நேரடியாக அணியுடன் இணையவுள்ளார். தவிர கண்ணில் பிரச்சினையையும் ஷகிப் கொண்டுள்ளார்.

புத்தளம் போல்டனுக்கு

## புதிதாக மேலங்கிகள்

■ எம்.யூ.எம். சனூன்




புத்தளம் போல்டன் கால்பந்தாட்ட கழகத்துக்கு புதிதாக மேலங்கிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. போல்டனின் முகாமையாளர் எம்.எம். நிஸ்வரின் வேண்டுகோள் பிரகாரம் புத்தளம் லெஜன்ஸ் கால்பந்தாட்ட கழகத்தின் ஸ்தாபக தலைவர் முஹம்மது யமீனால் இந்த மேலங்கிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. 40,000 ரூபாய் பெறுமதியான மேலங்கி தொகுதியே கையளிக்கப்பட்டுள்ளன.

# அல்வரேஸைக் கைச்சாத்து

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜூலியன் அல்வரேஸை ஆறாண்டு ஒப்பந்தமொன்றில் 81.5 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு கைச்சாத்திடுவதை ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் பூர்த்தி செய்துள்ளது.



ஆரம்பத்தில் 64.4 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை செலுத்தவுள்ள அத்லெட்டிகோ, பின்னர் சில நிபந்தைகள் பூர்த்தியாகுமிடத்துக்கு 17.1 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை 24 வயதான அல்வரேஸுக்காகச் செலுத்தவுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்த முன்களவீரரான அல்வரேஸ், 106 போட்டிகளில் விளையாடி 36 கோல்களைப் பெற்றுள்ளார்.

கல்முனை அல் மிஸ்பாஹ் ம.வி மாணவன்

# தேசியத்துக்கு தெரிவானார்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலை மெய்வல்லுநர் சங்கத்தால் நாடு பூராக நடைபெறும் 53ஆவது சேர் ஜோன் ட்ராபட் கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகள் கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்படும் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவன் எம்.எம்.எம். ஆகில் மிகா 15 வயது ஆண்களுக்கான 80 மீற்றர் தடைதாண்டலில் முதலாமிடத்தையும், 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் 12 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தல்




போட்டியில் ஏ.எம். லாயிஸ் 3.92 மீற்றர் தூரம் பாய்ந்து அதி சிறந்த திறமைகளை வெளிக்காட்டிய வீரர்களுக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 14,ஆகஸ்ட் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.